வள்ளுவம் போற்றுவோம்!

வள்ளுவன் வாழ்த்துவோம்

Sastha Tamil Foundation

STF

TEXAS-WIDE

திருக்குறள் போட்டி THIRUKKURAL COMPETITION

Sastha Tamil Foundation Event

# T10

## 10TH YEAR THIRUKKURAL COMPETITION

குறள் சொல்லும் குரல் வெல்லும்!

**Venue:** Timber Ridge Montessori,
2550 Timber Ridge Drive,
Frisco, TX 75034

**DATE: SATURDAY, JAN 28th 2017**

**$1 PRIZE FOR EACH THIRUKKURAL WITH MEANING**



*Thirukkural Exhibition*

**Tamil Aaraadhanai Vizha & Prize Distribution**

**DATE: SATURDAY, FEB 11th 2017**

**Questions:** Contact us at T10potti@gmail.com

www.stfnonprofit.org

# Contents


3 “ஒரு குறள் ஒரு டாலர்” போட்டியின் பத்தாண்டு வரலாறு

6 உன்னைச் சொல்லும் திருக்குறள்

7 கரும்பு தின்ன கூலியா?

9 வள்ளுவருக்கு வந்தனம்!!

11 அசாத்திய நம்பிக்கை

12 திருக்குறள் நம் வாழ்க்கையை

13 பத்து ஆண்டுகளா???

14 திருக்குறள் கற்போம்

17 தமிழ்மொழி




# “ஒரு குறள் ஒரு டாலர்” போட்டியின் பத்தாண்டு வரலாறு




குழந்தைகள் தமிழில் பேசினாலே மகிழ்ச்சி என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ப்ளேனோ தமிழ்ப் பள்ளி, கல்வித்தரத்திற்காக பாராட்டுகளைப் பெறத் தொடங்கிய காலம்.

மாணவச் செல்வங்களுக்கு மேலும் என்னென்னவற்றை சொல்லித் தரலாம் என்று நினைத்த போது, திருக்குறள் சரியானதாகப் பட்டது. பள்ளிப் பாடத்திட்டத்துடன் திருக்குறளையும் கற்றுத் தந்து, 6 வார திறனாய்வு பயிலரங்கத்திலும் ஒப்புவிக்கச் செய்தோம்.

மூன்று முதல் அல்லது ஐந்து குறள்கள் வரை குழந்தைகள் சொல்லத் தொடங்கினார்கள். குழந்தைகளுக்கு தமிழ்ப் பயிற்சி, உச்சரிப்பு, மனனப் பயிற்சி என அனைத்தும் திறக்குறள் படிப்பதன் மூலம் கிடைக்கப் பெறுவதாக அறிந்தோம். உடன் சொல்லிக் கொடுக்கும் பெற்றோர்களுக்கும், புதிய வாய்ப்பாக அமைந்தது.

இன்னும் ஆர்வத்துடன் அதிகமான குறள்களை எப்படி அவர்களுக்குக் கற்றுத் தருவது என்று யோசித்த போது, பரிசுத்தொகை கொடுக்கலாம் என்று தோன்றியது.

ஒரு திருக்குறள் சொன்னால் ஒரு டாலர் பரிசு என்ற திட்டத்துடன், தனியாக போட்டி நடத்தலாம் என்று முடிவு செய்தோம். ப்ளேனோ பள்ளி மாணவர்கள் மட்டும் பங்கேற்ற முதலாம் ஆண்டு போட்டியில் 40 பேர் பங்கேற்றார்கள்.

போட்டி என்று பெயரில் இருந்தாலும், பங்கேற்றவர்கள் அனைவருமே வெற்றியாளர்கள் என்பதையே வலியுறுத்தி எல்லாக் குழந்தைகளையும் ஊக்கப்படுத்தினோம்.

நான்கு ஆண்டுகள், ப்ளேனோ தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்காக மட்டுமே நடத்தப்பட்ட போட்டி, 2012ம் ஆண்டு டல்லாஸ் மாநகர அளவில் விரிவுபடுத்தப்பட்டது.

அனைத்து தமிழ்ப் பள்ளி மாணவர்களும், தனியாக வீட்டில் தமிழ் படிக்கும் குழந்தைகளும் பங்கேற்றனர். 120 பேர் பங்கேற்றனர்.

2013ம் ஆண்டு டெக்சாஸ் மாநில அளவில் திருக்குறள் போட்டி விரிவடைந்தது. பரிசுத் தொகை 5000 டாலர்கள் ஆக உயர்ந்தது. திருக்குறள் போட்டி மழலைகளுக்கும் பெரியவர்களுக்கும் அறிமுகப்படுத்தப் பட்டது.

2014ம் ஆண்டு கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டிகள் அறிமுகப் படுத்தினோம். அதே ஆண்டு அமெரிக்காவிலேயே முதலாவதாக , திருமதி. கீதா அருணாச்சலம் 1330 குறள்கள் சொல்லி சாதனைப் படைத்தார்..

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை என அவ்வை அமுதமும் அறிமுகமானது. மென்பொருள் உருவாக்கி நடைமுறைப் படுத்தினோம்

2016ல் அமெரிக்காவிலேயே இரண்டாவதாக , ப்ளேனோ தமிழ்ப் பள்ளி ஆசிரியை முனைவர். சித்ரா மகேஷ் 1330 குறள்களை சொல்லி சாதனை படைத்தார்.

இந்த 2017ம் வருடம் பத்தாவது ஆண்டாக திருக்குறள் போட்டி வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.புதிய முயற்சியாக பொருட்காட்சி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொருட்காட்சி, திருக்குறள் போட்டி என அனைத்திலும் மொத்தமாக 370 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். 40 பேர் பெரியவர்கள் பிரிவில் திருக்குறள் ஒப்புவித்துள்ளனர்.

இரண்டேமுக்கால் வயது குழந்தை முதல் 73 வயது முதியவர் வரை பங்கேற்ற சாதனையும் நிகழ்ந்துள்ளது.

ப்ளேனோ தமிழ்ப் பள்ளியில் பயின்ற, 12ம் வகுப்பு மாணவி செல்வி. சீதா ராமசாமி, நமது திருக்குறள் போட்டியின் மூன்றாவது சாதனையாளராக 1330 குறள்களை சொல்லி வரலாறு படைத்துள்ளார்.

பத்தாவது ஆண்டைக் கொண்டாடும் வகையில் திருக்குறள் சார்ந்த சிறப்புக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்துள்ளோம். கலிஃபோனியாவிலிருந்து திரு. நா.உதயபாஸ்கர், ஹூஸ்டனிலிருந்து திரு. கரு மலர்ச்செல்வன், ஜெர்மனியிலிருந்து முனைவர்.க.சுபாஷினி பங்கேற்றுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் குழந்தைகளிடம் நாம் காணும் உற்சாகமும், பெற்றோர்கள், தாத்தா பாட்டிகளின் அளவற்ற ஆனந்தமும் இந்த போட்டியை தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற உத்வேகத்தைத் தருகிறது.

குறிப்பாக மழலலைகளின் குரலில் திருக்குறள்களைக் கேட்கும் ஆனந்தம் மீண்டும் எப்போது கிடைக்கும் என்ற ஆவலைத் தூண்டுகிறது.

போட்டியாளர்கள், நடுவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வலர்கள் என அனைவருமே இனிமையான அனுபவம் கிடைக்கப் பெற்றதாக தெரிவிக்கிறார்கள்.

2012ம் ஆண்டு டல்லாஸ் மாநகர அளவிலான போட்டிக்குப் பிறகு, அமெரிக்காவின் பல்வேறு நகரங்களிலிருந்தும் சாஸ்தா தமிழ் அறக்கட்டளையை தொடர்பு கொண்டு, போட்டி விவரங்களைக் கேட்டறிந்தனர். போட்டி விதிமுறைகள் உட்பட அனைத்தையும் பகிர்ந்து கொண்டோம். இன்று பல்வேறு நகரங்களில் 'ஒரு குறள் ஒரு டாலர்' போட்டிகள் நடத்தப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது

நல்லதொரு சமுதாயம் உருவாகவும் இந்த திருக்குறள் போட்டி உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

விசாலாட்சி & வேலு
சாஸ்தா தமிழ் அறக்கட்டளை





# உன்னைச் சொல்லும் திருக்குறள்...

***திருக்குறளுக்கு யாதும் ஊர், யாவரும் வாசகர். எந்த வேறுபாடும், மாறுபாடும் இன்றி மனித குலத்திற்குப் பயனாய் இருப்பது வள்ளுவம். பொருள் உணர்ந்து படிக்கும் போது நம்மை நாமே உணர்ந்து கொள்ளவும், நமக்கு நம் நிலையை உணர்த்திக் கொள்ளவும் திருக்குறள் வழியமைக்கிறது. குறள்கள் மறந்தாலும் அதன் பொருள் வேர்போல் மனதின் ஆழத்துள் சென்று பதிந்துவிடும். அவை நல்ல செயல்களைச் செய்யும் போதும் தோளில் தட்டிக்கொடுக்கும், அறநெறி தவறும்போது தலையில் கொட்டு வைக்கும் ஆசானாய் நிற்கும். உடல் பரிசோதனையைப் போல, மனநல மருத்துவரிடம் செல்வதுபோல குறளின்வழி மனிதன் தான் மனத்துக்கண் மாசு இலனா? இல்லையா? என்று அறியும் தன்மையைப் பொருள் உணர்ந்து படிப்பதன் பயனாகப் பெறலாம். இதை குறள் படித்த நாள் முதல் இன்றுவரை உணர்ந்து வருகிறேன்.***

***குறிப்பாகக் குழந்தைகள் மனதில் பசுமரத்து ஆணிபோல் கருத்துக்கள் பதியும் என்பதால், வள்ளுவன் சொன்னதை அவர்கள் வாக்கினில் கேட்பதோடு வாழ்க்கையிலும் பயனுறும்படி நல்லன விதைப்போம். மொழிதான் நம் இனத்திற்கான அடையாளம், தனிப்பெரும் சிறப்புப் பெற்ற நம் மொழியின் சிறப்பையும் அதன் வளத்தையும் குறள் வழியாகக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்வோம். குழந்தைகள் வழியாகக் குறளும், நம் மொழியும் வாழ்ந்திருக்கச் செய்வோம்.***

***செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க***
***செய்யாமையானும் கெடும். (466)***

***<u>முனைவர். சித்ரா மகேஷ்</u>***



**கரும்பு தின்ன கூலியா?** என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஏற்ப நம் சாஸ்தா தமிழ் அறக்கட்டளை வருடந்தோறும் திருக்குறள் போட்டி நடத்தி "ஒரு குறளுக்கு ஒரு டாலர்" என்று பரிசு கொடுத்து, குழலையும் யாழையும் மிஞ்சும் மழலைகுரலில் நம் குழந்தைகளை திருக்குறள் ஒப்புவிக்க ஊக்கப்படுத்துவதோடு, திருக்குறளின் உயரிய வாழ்வியல் நெறிகளை நாமும் நம் குழந்தைகளும் கற்று அதன் வழி நடக்க ஒரு நல்ல வாய்ப்பையும் நல்குகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட குறள்கள் தற்போதைய சமுதாயமான நமக்கும், வருங்கால சந்ததியரான நம் குழந்தைகளுக்கும் எவ்வாறு வழிகாட்ட முடியும் என்று உங்களில் சிலருக்கு தோன்றும் ஐயத்திற்கு திருக்குறள் வழியாகவும், கடந்த ஆறு ஆண்டுகளாக திருக்குறள் போட்டியில் எங்கள் மகள்கள் பங்கு பெற்ற அனுபவத்தைக் கொண்டும், அவர்களோடு திருக்குறள் கற்ற அனுபவத்தைக் கொண்டும் விடையளிக்க விழைகிறேன்.

நம் பிள்ளைகளின் திறமையை வளர்க்க வாரம் முழுதும் சிறப்பு வகுப்புகளுக்கு அனுப்பும் நாம் அவர்களுக்கு அன்புடைமையின் இன்றியமையாமையும், பொறையுடைமையையும், சகிப்புத்தன்மையையும், பொறுமையையும், தோல்வியைத் தாங்கும் மனதிடத்தையும் கற்றுக்கொடுக்க முடியாமல் திணறுகிறோம்.

"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை" என்ற குறளை ஐந்து வயதிலேயே அனுபவித்து அறியும் குழந்தை இந்த உலகையே தன் நட்பு வட்டம் ஆக்கும் கலையை எளிதாகக் கற்றுக்கொள்ளும்.

"ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்" என்ற குறளை பொருளுணர்ந்து இன்று ஒப்புவிக்கும் குழந்தைக்கு பழிவாங்கும் குணம் ஒருபோதும் தோன்றாது.

"இன்னா செய்தாரை ஒறுத்தல்" என்று சிறு வயதிலேயே மனனம் செய்த பிள்ளைக்கு மன்னிக்கும் குணம் மரபணுவோடு பின்னிப்பிணைந்துவிடும்.

திருக்குறளின் கருத்துக்கள் அனுபவபூர்வமானது மட்டுமல்ல, அறிவியல்பூர்வமானதும் தான் என்பதை நாமும் நம் குழந்தைகளும் உணர வேண்டும்.

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்"

அதாவது, துன்பம் வரும்போது (அதற்காக கலங்காமல்) நகுதல் வேண்டும், அத் துன்பத்தை எதிர்த்து வெல்லவல்லது அதைப் போன்றது வேறு இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இரண்டே வரிகளில் குறள் சொன்ன இந்தக் கருத்தை சமீபத்தில் Oxford பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டன்பர் என்கிற ஆராய்ச்சியாளரின் ஆய்வு முடிவுகள் பிரதிபலிக்கின்றன. மனிதன் சிரிக்கும் போது அவன் மூளை சுரக்கும் எண்டோர்பின் (endorphin) என்னும் வேதிப்பொருள் வேதனையைத் தாங்கும் சக்தியை அதிகரிப்பதாக அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். (Laughter increases the pain threshold or the ability to ignore pain)

நம் பிள்ளைகளின் அதிப்படியான பாட சுமைகளுக்கு நடுவே அவர்களுக்கு கடினமாகத் தோன்றும் திருக்குறளை கற்றுக்கொடுக்க முடியுமா என்று தயங்காமல் வாரத்திற்கு ஒரு குறள் என்றோ மாதத்திற்கு ஒரு குறள் என்றோ நாம் தொடங்கினால் அவர்களின் எதிர் காலத்திற்கு அவை ஒரு சிறந்த துணையாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆகவே, ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தாயாகவும், என்நோற்றான் கொல் என்று ஏங்க வைக்கும் தந்தையாகவும் நாம் உயர நம் குழந்தைகளுக்கு திருக்குறளை போதிப்போம்,

கற்போம் கற்பிப்போம் உலகப்பொதுமறையாம் திருக்குறளை
வாழ்வோம் அதன் வழி .
நன்றியுடன்

**<u>அகிலா இளங்கோவன் .</u>**

Thanks to our Food sponsors




# வள்ளுவருக்கு வந்தனம் !!

"அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் " என்று தமிழ் மூதாட்டி அவ்வையாரால் விவரிக்கப் பட்டத் திருக்குறள் காலங்காலமாய் நம்மிடையே வீரநடை போடுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒரு தனி மனிதன் தன் வாழ்க்கையைச் செம்மையான பாதையில் நடத்திச் செல்வதற்கு வழிகாட்டியாக, இயற்றிய காலம் முதல் இருந்து வருகிறது திருக்குறள்.

வயது, மதம், இனம், காலக்கட்டம், மொழி, என பல வரம்புகளை உடைத்து மனிதனுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது. ஏழு வார்த்தைகளில் வாழ்வியலில் சிறந்து விளங்க அறிவுரைகளை வழங்குகிறது திருக்குறள். "உலகப் பொதுமறை" என்னும் இத்தகைய நூலின் சிறப்பால் ஈர்க்கப்பட்டு இதன் புகழை பரப்ப பலரும் முயற்சி செய்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு வெற்றிகரமான முயற்சி தான் சாஸ்தா தமிழ் அறக்கட்டளை நடத்தும் திருக்குறள் போட்டி.

2007-ல் தொடங்கி செவ்வனே நடந்து வரும் இந்தப் போட்டியில் நடுவராகவும், நடுவர்களின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்ததை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன். வள்ளுவரின் திருவாக்கான பழம் பெருமை பெற்ற திருக்குறள் மீது உள்ள பற்று தான் இப்பணியில் ஈடுபடக் காரணமாக இருந்து வருகிறது. சாஸ்தா தமிழ் அறக்கட்டளை நடத்தும் ப்ளேனோ தமிழ்ப் பள்ளி அளவில் தான் முதல் திருக்குறள் போட்டி நடந்தது. "ஒரு குறளுக்கு ஒரு டாலர் " என்னும் புதுமையான அணுகுமுறையால்

குழந்தைகளின் கவனத்தை திருக்குறள் மீது திரும்ப வழி வகுத்தனர். தொடர்ந்த வருடங்களில் விடாமுயற்ச்சியுடன் டல்லாஸ் மாநகர் அளவில் மட்டுமில்லாமல் டெக்சாஸ் மாகாணம் அளவிலும் இந்த போட்டியை எடுத்துச் சென்று உள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் எழுதிய வாக்கியங்களை வளரும் நம் குழந்தைகளின் வாயால் கேட்பது பெரும் ஆனந்தம்.

"குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் "

என்று மழலை மொழியில் குறளைக் கேட்கும் போது உருகாத உள்ளம் இல்லை.கடந்தப் பத்து ஆண்டுகளாக நடந்து வந்த போட்டிகளில் உருகிய இத்தகைய உள்ளங்களும் தருணங்களும் பல கண்டிருக்கின்றேன். ஆங்கில மொழியை முதன்மையாகக் கற்றுக்கொண்ட இந்த பிள்ளைகள், திருக்குறளை படித்து, அறிந்து, புரிந்து ஒப்புவிக்கும் போது அவர்களின் மனத்திடத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். இத்தகைய வாய்ப்பை பயன்படுத்தி திருக்குறளை ஓதும் அனைவரும் வெற்றிக்குரியவர்கள் என்றுக் கருதுகிறேன்.

இந்தப் போட்டியினால் டல்லாஸ் மாநகரத்தை உலக மேடையில் நிறுத்திய குறளரசிகள் கீதா அருணாச்சலம், முனைவர் சித்ரா மகேஷ் ,குறள் இளவரசி சீதா ராமசாமி ஆகியோரை நினைத்து பெருமைப்படுகிறேன். திருக்குறள் போட்டிகளினால் சந்தித்த அனைத்து தமிழ் உள்ளங்களை அறிந்ததில் மிகவும் ஆனந்தப்படுகிறேன். இந்த அறிய வாய்ப்பை அளித்த சாஸ்தா தமிழ் அறக்கட்டளைக்கு எனது மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களும். என்றும் தொடரட்டும் உங்கள் நற்பணி.

வாழ்க தமிழ் !! வளர்க தமிழ் !! வாழ்க வள்ளுவர் !!

<u>மருத்துவர் தீபா ராஜ்</u>



நாங்கள் இருவரும் சாஸ்தா தமிழ் அறக்கட்டளை நடத்தி வரும் திருக்குறள் போட்டியில் கடந்த ஏழு வருடமாக தன்னார்வ தொண்டர்களாக பணியாற்றி வருகிறோம். பள்ள அளவிலேயே நடத்தி வந்த திருக்குறள் போட்டி முதன் முதலில் 2011 ஆம் ஆண்டு டல்லாஸ் மாநகரத்தில் உள்ள அனைத்து பள்ளிகளையும் இணைத்து நடத்திய போது, நாங்கள் இருவரும் மிகவும் ஆர்வத்தோடு பல பணிகளில் ஈடுபட்டோம். அன்று நடந்த தமிழ் ஆராதனை விழா எங்களால் மறக்க முடியாத ஒன்று. விழா சிறப்பாக முடிந்தவுடன் ஏற்பட்ட உணர்ச்சிகரமான மகிழ்ச்சி மற்றும் தமிழ் மொழியின் மீது உள்ள பற்றும் நாங்கள் மேலும் மேலும் திருக்குறள் போட்டியில் பங்கேற்று பணி செய்ய ஒரு தூண்டுதலாக விளங்கியது .



சாஸ்தா அறக்கட்டளையின் நிறுவனர்களான வேலு மற்றும் விசாலாட்சி அவர்களின் துடிப்பையும், அசாத்திய நம்பிக்கையையும் கண்டு பலமுறை வியந்துள்ளோம். இந்த அறக்கட்டளை ஒரு குடும்பமாக இயங்கி வருகிறது. இந்த குடும்பம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது. இதில் நாங்களும் உறுப்பினராக உள்ளது பெருமையே. எங்களுக்கு இந்த வாய்ப்பை கொடுத்த வேலு மற்றும் விசாலாட்சி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றி.

<u>கவிதா & வெங்கடேசன்</u>




*உலகம் போற்றும் பொதுமறையாம் திருக்குறள் நம் வாழ்க்கையை நல்வழி படுத்தி ,சிறப்பாக வாழ வைக்கிறது .*

*எங்கள் மகள் "சீதா ராமசாமி "1330 குறள்களையும் தங்கு தடையின்றி நான்கு மணி நேரத்திற்குள் சொல்லி சாதனை படைத்தது நம் அனைவருக்கும் பெருமை சேர்த்திருக்கிறாள் முதலில் 155 குறள்களில் ஆரம்பித்து, 320 ,505 ,778 என படிப்படியாக முன்னேறி இன்று 1330 குறள்களையும் ஒப்புவித்து எங்களை மகிழ வைத்திருக்கிறாள்.*

*சீதா மிக ஆர்வத்துடன் பலமுறை எழுதி, ஒப்புவித்து படித்தாள். நாங்கள் குறளை ஒலிப்பதிவு செய்தும் ,குறளின் பொருளை விளக்கமாகவும் கூறினோம் .இப்படி பல்வேறு வழிமுறைகளில் படித்ததால் ,திருக்குறள் எளிதாகவும் ,ஆழமாகவும் மனதில் பதிந்தது.சீதாவிற்கு மிகவும் பிடித்த குறள்*

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்*

*திண்ணிய ராகப் பெறின்"*

*இதன் பொருள் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று எண்ணி உறுதியுடன் செயல்பட்டால் வெற்றியுடன் சாதிக்க முடியும்".இந்த குறள் வழி நின்று சாதித்தும் காட்டியிருக்கிறாள் .எங்கள் குழந்தைகள் சீதா மற்றும் சஹானா உமா ,திருக்குறளை படித்ததால் நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்தியுள்ளனர்.*

***சாந்தி பாலாஜி***




# பத்து ஆண்டுகளா???

இது சிறு விதை விழுந்து குறுமரமாய் வளர்ந்த வரலாறு! அந்நிய தேசம் வந்து, தமிழர் தம் மகவுக்கு அனைத்து வாய்ப்புகளையும் வழங்கி, சீராட்டி வளர்த்து வருகின்றனர். அன்று ஒரு காலத்தில், நம் மொழி வேண்டாமா என்ற உந்துதலில் பள்ளி வந்தது. பின்னே, வகுப்பில் பெருஞ்செல்வம் ‘திருக்குறள்’ பதினைந்து மணித்துளிகள் பாடமாக அறிமுகம் ஆனது.

குறள்வழி மனதில் நன்கு பதிய வேண்டும் என்பதற்காக போட்டி ஆரம்பிக்கப்பட்டது. பள்ளி வளாகத்தில் நம் மாணவர்கள் தலைக்கு முப்பது அல்லது நாற்பது குறள் சொல்லும் நாள் பின்னே போய் இன்று நூற்றுக்கணக்கான மாணவமணிகள் பங்கெடுத்து முழு தின நிகழ்ச்சியாக, பொது இடத்தில் பெரும் விழாவாக வளர்ச்சி கண்டுள்ளது.

அன்று பள்ளியின் நடுவறையில் நம் மாணாக்கர் நூறு குறள் சொன்னபோது ஆர்வலர்களின் உள்ளம் பொங்கி வழிந்தது. இன்று நம் மாணாக்கர் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களையும் கூறி சிகரத்தில் கொடி நாட்டிவிட்டார்!

நாம் அறிவது என்னவென்றால், மக்கள் சக்தி ஒரு காட்டாறு! நலம் நாடி, நற்பண்பு நாடி, சுற்றம், உறவு நாடி வாழும் தமிழருக்கு மொழிக்கு விழா எடுப்பது கைவந்த கலையாகிவிட்டது.

தன்னார்வ தொண்டராய், ஆசானாய், நடுவராய், வள்ளலாய், இன்னும் பல பொறுப்புகளையேற்று திறம்பட செயலாற்றும் நம் மக்களுக்கு பாராட்டுதல்கள்! காலத்தே நாள் குறித்து, இடம் தேடி, விளக்கமாய் வேலை பிரித்து, அணி, அணியாய் கவனம் செலுத்தி, மக்கட்பதிவு, மதிப்பெண்கள், வெற்றிப்பரிசு, சான்றிதழ், நாடகம் உட்பட்ட நிகழ்ச்சி தொகுப்பு, வயிராற உணவு, பொருள் ஈட்டல் என்றனைத்தையும் சாத்தியம் ஆக்குவது மக்கள் சக்தி!

நம் உணர்வில் கலந்த வள்ளுவத்தினால், நம்மில் பெருமை கொண்டு, ஒற்றுமையாய் ஒன்று கூடி, நம்மால் முடிந்த வகையில் பங்கெடுத்து தமிழ் என்னும் அரிய தேரை பல காலம் இழுத்துச் செல்வோம் என்ற நம்பிக்கையோடு பத்து ஆண்டு பெருவிழா எடுக்கும் அனைத்து ஆர்வலர்களுக்கும் வாழ்த்து கூறி விடை பெறுவது,

- <u>ராஜி பிரபாகரன்</u>

# திருக்குறள் கற்போம்



கடவுள் வாழ்த்துக்கு அடுத்து நம் கல்வியின் மனப்பாடச் செய்யுளாக இருந்தது திருக்குறள். தமிழைப் பாடமாகப் பயின்ற ஒவ்வொருவரும் எல்லா வகுப்புத் தமிழ்ப்பாடத்திலும் திருக்குறளைப் பயின்று மனப்பாடம் செய்து வந்திருக்கிறோம். போதாக்குறைக்குப் பேச்சிலும் எழுத்திலும் திருக்குறள் எடுத்தாள்கை மிக்கிருந்த காலகட்டம் அது. அதற்குக் காரணம் தமிழ்மீது உண்மையான பற்றுடைய தமிழாசிரியர்கள் நமக்கு வாய்த்திருந்தார்கள். உத்தியோகத்திற்காக என்றில்லாமல் உள்ளமொன்றியவர்களாய்த் தமிழையும் தமிழ்ச்செய்யுள்களையும் கற்பித்தார்கள். கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கும் பாடங்க ளை மீறிய ஆழ்ந்த புலமை மொழியின்மீது அவர்கட்கு இருந்தது.

நம்காலத்தவர்கள் யாரை வேண்டுமானாலும் கேட்கலாம். அவர்கள் நினைவுகொண்டிருக்கும் ஆசிரியர்களில் முதன்மையானவர் தமிழாசிரியராகத்தாம் இருப்பார். நவீனக் கவிதைத்தளத்தில் கடந்த கால்நூற்றாண்டாகச் செயல்படுகின்ற எனக்கு இவ்விலக்கியவாதிகள் தமிழ் மரபுச் செய்யுள்கள்மீது காட்டிய ஆர்வமின்மை அதிர்ச்சியாகவே இருந்தது. இன்றும்கூட தமிழில் எழுதுகின்றவர்கள் பலர்க்குப் பழந்தமிழ் இலக்கியங்கள்குறித்த மேலோட்டமான அறிவுகூட இல்லை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எவை என்று தெரியார். எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அறியார். இவர்கள் எதைப் பயின்று தமிழ் கற்றார்கள் என்று வியப்பாக இருக்கிறது.

மரபிலக்கியப் பயிற்சி பெற்றோர் இத்திரளில் இன்று தனித்துவமாய்த் தோன்றுகின்றனர். காலம் செல்ல செல்ல இலக்கணம் அறிந்து எழுதுகின்றவர்களைக் காண்பது அரிதாகிவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. குருட்டுப்பூனை விட்டத்தில் தாவியதைப்போன்ற மொழியில் பலர் எழுதிகொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இத்தகைய சூழ்நிலையில்தான் திருக்குறள் போன்ற நீதிநூல்களைப்பற்றி மீண்டும் பேசுவது முக்கியமாகிறது. திருக்குறளைப் பழுதறக் கற்றதும் ஒருவர் தேர்ந்த தமிழறிஞர் ஆகிறார். தமிழின் அத்தனை மர்மங்களும் வியப்புகளும் ஒவ்வொரு குறட்பாக்களிலும் பொதிந்துள்ளன.

நாம் பொதுவாக அவனுக்கு, இவனுக்கு, ஒருவனுக்கு என்று எழுதிக்கொண்டுள்ளோம்.

அவன்+கு என்பது சேரும்போது என்னவாகிறது ? அவனுக்கு என்று ஆகிறது. இது நம் நம்பிக்கை. எல்லாரும் அப்படித்தான் எழுதுகிறார்கள். அவன்+கு சேரும்போது அவன்+உக்கு என்று எப்படித் திரிந்தது ? ஆம் திரிந்திருக்கிறது. அப்படியானால் அவனுக்கு என்பது ஏதோ பிறழ்ந்த வழக்கு, கொச்சை வழக்கு என்பது புலனாகிறது.

அவன்+கு = அவற்கு என்றே ஆகும். திருக்குறளில் மகன்+கு = மகற்கு என்றிருக்கிறது. மகனுக்கு என்றெழுதாமல் மகற்கு என்று எழுதுகிறார் வள்ளுவர். ஒருவன்+கு என்பதை ஒருவனுக்கு என்ற் வள்ளுவர் எழுதவேயில்லை. ஒருவற்கு என்று எழுதுகிறார். அதாவது ன் என்று முடியும் சொல்லோடு கு சேர்த்தால் ன்+கு = ற்கு என்றே புணரும். ஆனால், இடைக்காலத்தில் தோன்றிய ஏதோ ஒரு கொச்சத்தன்மை அவனுக்கு, இவனுக்கு, மகனுக்கு, ஒருவனுக்கு என்று எழுதும்படி திரிந்துவிட்டது.

இத்தகைய திரிபுகளால் திருக்குறளுடன் நமக்கிருக்கும் உறவு, அது பயன்படுத்திய மொழியோடு நமக்குள்ள பிணைப்பு மாசுபட்டுவிட்டதா ? இத்திரிபுகளில் குறள்கொண்ட மொழியை இழந்துவிட்டோமா ? இல்லை என்பதுதான் நம்மைச் சிலிர்க்கவைக்கும் விடை.

திருக்குறளில் வள்ளுவர் எவ்வாறு புணர்த்தி எழுதினாரோ அவ்வழக்கு இன்றும் பயன்பாட்டில் இருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ளாமலேயே, நாம் எல்லாரும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். என்ன வழக்கு அது ? அதனுக்கு, இதனுக்கு, எதனுக்கு என நாம் எங்காவது எழுதுகிறோமா ? இல்லை. அதன்+கு = அதற்கு, இதன்+கு = இதற்கு, எதன்+கு = எதற்கு என்றே எழுதிக்கொண்டிருக்கிறோம்.

பேசிக்கொண்டிருக்கிறோம். ஆக, வள்ளுவர் பயன்படுத்திய புணர்த்திய வழக்கு இன்றுவரையில் மாறாமல் தொடர்ந்து வருகிறது. திருக்குறள் உள்ளிட்ட நம் பழந்தமிழ் இலக்கியங்களின் மொழி இன்றுவரை நம்மோடு கொண்டுள்ள தொல்பழந்தொடர்பில் எந்தக் கண்ணியும் எங்கும் அறவில்லை என்பதே உண்மை.

திருக்குறள் ஒவ்வொரு காலகட்டத்துச் சமூகத்திற்கும் அதற்குத் தேவையான அறக்கருத்துகளைக் கூறியே வந்திருக்கிறது. மன்னராட்சி முறைகள் அகன்று குடியாட்சி மலர்ந்தாலும் அமைச்சர்களின் கடமைகள் யாவை என்று அதிலிருந்து பெறலாம். மன்னரைச் சேர்ந்தொழுகல் எப்படி என்று தெளியலாம்.


திருக்குறளோடு தொடர்புடைய இயல் அதற்கு எழுதப்பட்ட உரைகளாகும். வழிநெடுகவும் நம் முன்னோர்கள் பல்வேறு காலகட்டங்களில் குறட்பாக்களுக்கு உரை வகுத்துள்ளனர். பரிமேலழகர் தொடங்கி தற்காலத் தமிழாசிரியர்கள்வரை குறள்கட்கு எழதப்பட்ட உரைகள் ஒவ்வொன்றும் வள்ளுவத்திற்குச் சிறப்புச் செய்தவையே. பிற்காலத்தில் செய்யப்பட்ட உரைகள் குறள்வழங்கிய கருத்துகளோடு முதன்மையாக ஒன்றிப்போகாமல் தற்குறிப்பேற்ற கருத்துகளைக்

கொண்டிருப்பதையும் காண முடிகிறது. உதாரணத்திற்குக் குறளுக்கு எழுதப்பட்ட சன்மார்க்க உரையில் முதற்குறளுக்கு எழுத்துகள் அகரத்தை முதலாகக் கொண்டதுபோல இவ்வுலகம் ஆதியெனும் அருட்பெருஞ்ஜோதியை முதலாகக் கொண்டது என்று காணப்படும்.

குறளுக்கு உரைவகுக்கும் நாத்திகச் சார்புடையர் வள்ளுவத்தின் தவக்கருத்துகளை வேறுவகை முனைப்பாகக் கருதி உரைகூற முற்படுவார் என்பது புரிந்துகொள்ளத்தக்கதே.

திருக்குறளுக்குக் காலந்தோறும் புதுமைக்குப் புதுமையாய் முன்னைப் பழைமைக்கும் பழைமையாய் உரையாத்துச் செல்ல வேண்டும். வள்ளுவர் வழங்கும் கருத்துகள் எவையோ அவற்றின் அடியொற்றியபடி சென்று, நவீனமான தமிழுரைநடையில் திருக்குறள்களுக்கு உரையெழுதவேண்டும் என்னும் ஆசை என்னைப் பற்றியது. குறள்நிகர்த்த தமிழில் அதன் உரையும் துலங்கவேண்டும், உரையை மட்டுமே தனியாய்ப் படிக்க விரும்பினாலும் அதன் செம்மாந்த தன்மையோடு திகழ வேண்டும் என்னும் கனவுகளோடு திருக்குறளுக்கு உரையெழுதி முடித்தேன். தமிழறிஞருள் குறளறிஞராயிருத்தலின் அருமையை முழுமையாக உணர்கிறேன்.

- கவிஞர் மகுடேசுவரன்



**STF was founded in 2010** by Visalakshi Velu and Velu Raman.

- Thirukkural Competitions have been successfully conducted for **10 years** now, with around 260 participants **reciting Thirukkurals over 8800 times this year**.
- Last year, STF Coordinated a **national level competition at FeTNA** for children all over the Unites States.
- **Avvai Amudham, Pechu Potti and Katurrai Potti** have been conducted since 2014.
- Through STF **Robbins Thanksgiving Basket Brigade** project we have distributed over 350 Baskets in 8 years to support our local community.
- To create a sense of contribution for our young children, STF has been conducting **Child-To-Child Harmony** Pen Pal Sponsorship program for 8 years now, supporting 30 Udavum Karangal children every year.
- **STF has Raised over $500,000** to support needy Organizations like Udavum Karangal, Sakthi Kalai Kuzhu and various other organizations.
- STF prides in **honoring accomplished industry leaders and visionaries** from the Tamil community in North America for their services, stewardship and success.

# தமிழ்மொழி

## தமிழ் மொழியில் என்ன இருக்கிறது?

## திருக்குறள் குழந்தைகளுக்கு ஏன்?



### மொழி

மொழி ஒரு இனத்தின் முகவரி. மொழி ஒரு இனத்தின் விழுமியங்களை மற்றவர்களுக்கு கொண்டுசெல்லும் ஒரு ஊடகம். மொழி என்பது ஒருவர் மற்றவருடன் பேசுவதற்கு பயன்படும் ஒரு ஒலி தான். ஆனால் தமிழ், மற்ற மொழிகளைப் போல் அல்லாமல் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உணர்த்தும் பெருமை வாய்ந்தது.

உதாரணமாக GOD என்ற ஆங்கிலச் சொல் கடவுளைக் குறிக்கும், பிரித்துப் பொருள்

கொள்ள முடியாது. ஆனால் தமிழில் கடவுள் என்றால் கட + உள் என்று பொருள், உன்னை நீயே உன்னுள் கடந்து சென்று உன்னுள் உன்னைத் தேடு என்று பொருள்.

அதே போல், தமிழில் உள்ள வினைச்சொல் மட்டும் தான் திணை, பால், மற்றும் எண்ணிக்கை என்ற மூன்றையும் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. உதாரணம் -

வருகிறான் - உயர்திணை, ஆண் பால், ஒருவன் - நிகழ் காலம்

வருகிறாள் - உயர்திணை, பெண் பால், ஒருவள் - நிகழ் காலம்

வருகிறது - அ.:றிணை, ஒன்றன் பால், ஒன்று - - நிகழ் காலம்

வருகின்றார்கள் - உயர்திணை, பலர் - நிகழ் காலம்

வருகின்றன – அ.:றிணை, பலவின் பால்- நிகழ் காலம்

தமிழில் மட்டும் தான் மூல மொழியில் உலகில் உள்ள அனைத்து மதங்களுக்குமான காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளது

உலகிலேயே பேசி, எழுதி மற்றும் படித்துப் புழக்கத்தில் உள்ள இரண்டு செம்மொழிகளில் ஒன்று நம் தாய் மொழியாம் தமிழ்.

இதற்கு மட்டும் தான் தொல்காப்பியம் என்ற மொழி ,சொல், யாப்பு மற்றும் பொருள் இலக்கணம் கொண்ட இலக்கண நூல் உள்ளது.

2000ம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம் பண்பாட்டுத் தொட்டிலின் முதல் படியில் இருந்தபோது, தமிழ் நாகரிகம் மட்டும் பண்பாட்டின் உச்சந்தொட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் நம் சங்க இலக்கியங்களில் இருக்கிறது

ஒரு மொழி என்பது, முதலில் ஒலியாக, சொல்லாக , பிறகு வடிவம் பெற்று எழுத்தாக மாறி , பின்னர் நல்ல வாழ்வியல் சிந்தனைகளின் தொகுப்பான இலக்கியமாக ( literature is collection of best thoughts) மாற, அந்த மொழி ஆதி நிலை, முதல் நிலை, இரண்டாம் நிலை,.. என்று பரிணாம வளர்ச்சி பெறப் பல நூற்றாண்டுகளாகும் என்று மொழி ஆய்ந்த வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

மிக சமீபகாலத்தில் பழனிக்கு அருகில் இருக்கும் பொருந்தல் கிராமத்தில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியின் படி கிடைத்த முதுமக்கள் தாழி மற்றும் தாழியில் இருந்த நெல் மணிகள் கி மு 450 ஆண்டிற்கு முற்பட்டவை என்றும் அதில் கிடைக்கப் பெற்ற எழுத்துக்கள், இரண்டாம் நிலைத் தமிழ் எழுத்துக்கள் என்றும் அறியப்பட்டுள்ளது. இது இரண்டாம் நிலைத் தமிழ் எழுத்துக்கள் என்ற அமெரிக்க ஆராய்ச்சி நிலையத்தின் முடிவின்படி பார்த்தால் நம் தமிழ் மொழியின் தொன்மை 3000ம் ஆண்டுகளுக்கு முன்னே செல்கிறது.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் .

மேலும், தமிழ் என்றால் மூத்த மொழி. ஆனால் மூத்தவர்களுக்கு மட்டுமான மொழி அல்ல என்பதை நம் அடுத்த தலை முறைக்கும், இந்த நவீன உலகத்துக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பது நம் கடமை மற்றும் நமக்குக் கிடைத்த பெரும் பேறு.

## திருக்குறளும் குழந்தைகளும்

குழந்தைகளை மிக எளிமையாகத் தமிழ் பயில்விக்க

- 2000ம் ஆண்டுகளுக்கு முன் பொய்யாமொழிப் புலவரால் நமக்கு அருளப்பட்ட, மதம், மொழி கடந்த நம் திருக்குறளை,

- ஓதுவற்கு எளிதாய் உணர்வதற்கு அரிதாய்

  வேதப் பொருளாய் மிக விளங்கி

  உள்ளுதொறும் உள்ளுதொறும்

  உள்ளம் உவக்கும் நம் திருக்குறளை,

- ஏழே வார்த்தைகளில் உள்ள நம் திருக்குறளை,

- இதுவரை உலகத்திலேயே, பைபிள் மற்றும் குரானை அடுத்து அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற நம் திருக்குறளை
- தமிழின் விழுமியங்களையும், தொன்மையையும் ஒருங்கே தன்னுள் கொண்டுள்ள நம் திருக்குறளை

நம் குழந்தைகளுக்குக் கொண்டு சேர்க்க நம் பங்கை ஆற்றுவோம்.

திருக்குறள் பயில்வோம்!
திருக்குறள் பயிற்றுவிப்போம்!
தமிழை வளர்ப்போம்!

நன்றி

பழநிசாமி

வள்ளுவம் போற்றுவோம்! வள்ளுவன் வாழ்த்துவோம்



Sastha Tamil Foundation STF

# T10

TEXAS - WIDE
திருக்குறள் போட்டி THIRUKKURAL COMPETITION
Sastha Tamil Foundation Event

## 10TH YEAR THIRUKKURAL COMPETITION

### திருக்குறள் சார்ந்த கருத்தரங்கம்

சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் பத்தாம் ஆண்டுத் திருக்குறள் போட்டியை முன்னிட்டு சிறப்புச் சேர்க்கும் வகையில் முதன் முறையாக திருக்குறள் சார்ந்த கருத்தரங்கம்!

**பேச்சாளர்கள்:**

திரு. நா. உதயபாஸ்கர்,
திரு. கரு மலர்ச்செல்வன்,
முனைவர். க. சுபாஷினி

**மேலும் விபரங்களுக்கு / உங்கள் வருகையைப் பதிவு செய்ய :**
http://goo.gl/s3SN5P

### திருக்குறள் பொருட்காட்சி

குழந்தைகளின் திருக்குறள் சார்ந்த சிந்திக்கும் திறமைக்கான ஒரு சவால்!
குழுவாக பகிர்ந்தும் இணைந்தும் செயல்பட ஒரு அறிய வாய்ப்பு!!!

* பதிவு கட்டணம் இல்லை.
* பங்கு பெறுகிற அனைத்து குழந்தைகளுக்கும் பங்களிப்புச் சான்றிதழ்கள் / பதக்கங்கள்

**மேலும் விபரங்களுக்கு**
http://goo.gl/I5kSTb

**இடம்:** Timber Ridge Montessori, 2550 Timber Ridge Drive, Frisco, TX 75034
**நாள்: சனிக்கிழமை, பிப்ரவரி 11, 2017**
**நேரம்: காலை 9.00 மணி**

### தமிழ் ஆராதனை விழா மற்றும் பரிசளிப்பு விழா

இது ஒரு பரிசளிப்பு விழா மட்டும் அல்ல பங்கு பெற்ற அனைத்து குழந்தைகளையும், அவர்களை ஊக்குவித்த அனைத்து பெற்றோர்களையும், போற்றுகின்ற, ஆராதிக்கின்ற விழாவாகும்.

உங்கள் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் வருகை தந்து விழாவை சிறப்பிக்குமாறு விரும்பி கேட்டுக்கொள்கிறோம்.

**இடம்:** Centennial High School, 6901 Coit Road, Frisco, TX 75035
**நாள்: சனிக்கிழமை, பிப்ரவரி 11, 2017**
**நேரம்: மாலை 4.30 மணி**

www.stfnonprofit.org